புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

=====================================================================

# திலகவதியின் சிறுகதை இலக்கியத்தில் பெண்ணிய நோக்கு

*முனைவர் மு.ராதா*
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*குடியாத்தம்-635 803.*

=====================================================================

## முன்னுரை

தன்னுடைய தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கும், இனம் பெருகுவதற்கும், புதிய தேவைகளை உருவாக்குவதற்கும் காரணிகளை உற்பத்தி செய்யும் கூட்டியக்கமே சமுதாயமாகும். அதில், குடும்பம் மிக முக்கியமானதும் அடித்தளமானதுமான ஒரு சமூகக் குழுவாகும். இக்குழுவில் மணமாகாத பெண் உடை, அலங்காரம், அன்றாட நடவடிக்கைகள், காதல், திருமணம், வறுமை, பெற்றோர் இன்மை போன்ற பல்வேறு சிக்கல்கள் நிறைந்திருப்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## திலகவதி

தன் எழுத்தாற்றலால் தமிழக மக்களின் மனங்களில் தனக்கான இடத்தை பிடித்திருக்கும் கருத்தாழம் மிக்க சிறந்த பெண் எழுத்தாளர் திலகவதி அவர்கள் இவரது சிறுகதைகள் உயிரோட்டமான. ஆழமான, நுண்ணிய உணர்வுகளை வெளிப்படுத்தும் அனுபவங்களாக உள்ளன. பெண்கள் எல்லோரும் ஒரே மாதிரியான குணம் உள்ளவர்கள் அல்ல. பெண்களின் இயல்புகள் மாறி மாறி இருக்க வாய்ப்புகள் அதிகம். ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையும் போராட்டமும் பிரச்சனைகளும் நிறைந்தது அதை தீர்ப்பதற்கு தெளிவும் சிந்தனை திறமையும் வேண்டும் என்பதை திலகவதி தன் சிறுகதைகளின் மூலம் எடுத்துறைக்கிறார்.

## பெண்ணும் அலங்காரமும்

நாகு, ஆஷா போன்றோர் ஒப்பனையில் ஈடுபாடு கொண்டவர்களாக உள்ளனர். குடும்பத்தில் இருக்கும் மாணிக்கம் தன் மனைவியிடம்,“என்ன! வாயில் புடவையைக் கட்டிகிட்டு, புல்லாட்டம் செயினைப் போட்டுகிட்டு நிக்கறே! உன்னுடைய வைராக்கியத்தை எல்லாம் அப்புறமா காட்டு. இப்ப கோடீஸ்வர மில் ஓனர் மாணிக்கத்தோட பொண்டாட்டியா, லட்சணமா, நகை நட்டோட நாகரீகமா பொறப்படு.” (‘சிரித்தாலும் கண்ணீர் வரும்;, திலகவதி கதைகள்-1, ப.221.) என்று கட்டாயப்படுத்துகிறான். ‘மாணிக்கம்! உங்க பொண்டாட்டி எவ்வளவு அழகு! அடேயப்பா! என்னா நெறம், என்னா உடம்பு! ரொம்ப அதிர்ஷ்டக்காரருங்க நீங்க் என்று பிறர் கூறும்போது மெய்சிலிர்த்துப் போகிறான். ஆனால் அவளோ குடும்பத்தில் அடிமையாக இருப்பதை உணர்கிறாள்.

## காதல் மறுக்கப்படுதல்

பெற்றோர் மகளின் சம்மதத்தை எதிர்பார்க்காமல் அவளது திருமணத்தை நடத்த முற்படும் நிலையையும் காட்டுகிறார் திலகவதி. மாணிக்கவேலுக்கு மணமுடித்து வைக்கப்பட்ட கௌரி இறந்தவுடன் அவளுடைய தங்கை கற்பகத்தை மாணிக்கவேலுக்கு மணமுடித்து வைக்க அவளுடைய பெற்றோர் முற்படுகின்றனர். தன்னுடைய சந்தோஷத்தையும் எதிர்காலத்தையும் மட்டும் நினைத்துத் திருமணத்தைச் செய்து வைத்த பெரியவர்களின் மனத்தைக் கற்பகம், தான்

*பாதித்துவிடக் கூடாது என்பதற்காகக் குடும்பத்தில் நடந்த கொடுமைகளைப் பிறரிடம் கூறாது மறைக்கிறாள்ளூ தற்கொலையும் செய்து கொள்கிறாள். அதனை உணராத கௌரியின் பெற்றோர்,*

*“கௌரியும் அவரும் வாழ்ந்ததிலே பெரிய பிசகு இருந்திச்சானு நமக்குத் தெரியலே. கௌரியும் அவரு மேல் அப்படி ஒரு நாளும் புகார் பண்ணிலியே... அவ தலையெழுத்து அப்படிப் போகணுமன்னு இருந்திருக்கு. அவ போயிட்டா. அவ்வளவுதான்... முன்னே பின்னே தெரியாத யாரோ ஒருத்தனுக்கு உன்னைக் கட்டி வச்சா மட்டும் அவன் உன்னை நல்லா வச்சுக்குவான்னு என்ன உத்தரவாதம் இருக்குது.” (‘பேசிப் பயனென்னடி;, திலகவதி கதைகள்-2, ப.216.) என்று, கற்பகத்தை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்கின்றனர். பள்ளியிலும் கல்லூரியிலும் தொடர்ந்த நல்ல நட்பு வாணி-செல்லதுரையினுடையது. சில ஆண்டுகள் கழித்துச் சந்தித்துக் கொள்ளும்போது, அவள் வாங்கிவந்த தாலிக்கான காரணத்தைக் கேட்கிறான்.*

*“யாருக்குத் தாலிங்கறியா எனக்குதான். அக்கா போன வருஷம் செத்துடிச்சி. மூணு குழந்தைகள். மாமா ஆர்மியில் இருக்காரு. ரொம்ப அதிக இல்ல. நாப்பத்தைஞ்சி வயசு. அவருக்குத்தான் என்னைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு பண்ணியிருக்கறாங்க.” (‘முதன்முதலில் வந்தவள்;, மே.கு.நூ., ப. 641.) என்று அவனிடம் கூறும் அவளால், அவளுக்கு அந்தத் திருமணம் பிடிக்கவில்லை என்று கூட அவள் பெற்றோரிடம் கூற முடியாத தைரியமில்லாதவளாக இருக்கிறாள்.*

*உயர்கல்வியை மறுத்து திருமணம்*

*குடும்பத்தின் சூழ்நிலையையும், பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, முதலில் பிறந்த பெண்ணுக்குத் மேற்கல்வி மறுக்கப்பட்டு, திருமணம்செய்து வைக்கும் நிலையும் உள்ளது.*

*“படிப்பு... படிப்புங்கறியே... படிச்ச என்ன பண்ணப் போறே? ஒரு மூணு வருஷம் படிக்கலாம். இல்ல அஞ்சு வருசங்கூடப் படிக்கலாம். அப்புறம்... அதுக்கப்பறம் கல்யாணத்தைப் பண்ணிகிட்டுத்தானே ஆகனும். அதை இப்பவே பண்ணிக்க. எங்க பாரம் கொறையும்.”(‘நேசத்துக்குரிய எதிராளி;, மே.கு.நூ., ப.400.) என்று பார்வதியை திருநாவுக்கரசுவுக்கு மணமுடித்து வைக்கிறார்கள். திருமண வயது நெருங்கிய குடும்பத்தாரிடம் சமூகத்தார் எப்ப சார் கல்யாண சாப்பாடு போட போறீங்க என்று கேட்டு வைப்பதால், பெண்ணுக்குத் திருமணம் செய்யாதது குறையாகவே தெரிகறது. அதனால் முகுந்தன்,*

*“த பாரு கல்யாணி, மகாவுக்கு இருபத்தியாரு வயசாவுது. இப்ப அவளுக்குக் கல்யாணத்தைப் பண்றதைவிட வேற எதுவும் எனக்கு முக்கியமா படலை... பொம்பளைக்கு என்னிக்கும் புருஷன் தான் ஆதரவு, தைரியம் இன்னும் நீ சொல்ற எல்லாமும். நம்பப் பெரியவங்க இதை ஆயிரங் காலத்துப் பயிருன்னு சொன்னது சும்மா இல்ல...” (‘போன்சாய்ப் பெண்கள்;, மே.கு.நூ., ப.342.) என்று மனைவி கல்யாணியுடன் ஆலோசித்து மகளின் படிப்பை நிறுத்தித் திருமணம் செய்து வைக்க முடிவெடுக்கிறார்.*

*இளம் வயதில் திருணம்*

*இளம் வயதில் திருமணம் நடத்தி வைப்பது என்றது இன்று பெருமளவில் குறைந்துவிட்டாலும், இன்னும் சில இடங்களில் சில காரணங்களினால் நடந்துகொண்டுதான் இருக்கிறது. தனத்திற்குப் பதின்மூன்று வயதிலேயே திருமணம் செய்து வைத்ததால், அவள், தான் கர்ப்பமாக இருக்கிறோம் என்பதைக்கூட அறியாதவளாய்,*

*“அட! நம்ம வயத்துக்குள்ள பாப்பாவான்னு ஆச்சரியப்பட்டுக்கிட்டு... ” (‘அவசரம்;, மே.கு.நூ., ப.80.) குழந்தையைப் பெற்றெடுத்துள்ளாள். இவ்வாறானத் திருமணங்கள், இல்வாழ்வில் தோல்வியையே தந்துள்ளன என்பதாகத் திலகவதி கதைகளில் காட்டியுள்ளார்.*

*குழந்தைத் தொழிலாளர்கள்*

*குடும்பத்தின் வறுமை காரணமாக இல்லத்தில் இருக்கும் பெண், வேறு வீடுகளுக்கு ‘வேலைக்காரி;யாகச் சென்று, அதில் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்துவதைக் கதைகள் காட்டுகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள் இம்முறையிலும் உண்டாகிறார்கள். குட்டி என்ற எட்டு வயது சிறுமி வீட்டு வேலைக்காரியாக அம்மாவுடன் சேர்ந்து பணிபுரிகிறாள்.*

*வசந்தா என்ற பதினைந்து வயது பெண், டாக்டரம்மா வீட்டில் வேலைக்காரியாக அமர்த்தப்படுகிறாள்.*

*“ஆளு கூழையாயிருந்தா சின்னப் பொண்ணா? வர தைக்குப் பதினைஞ்சு முடியுதும்மா. அதெல்லாம் வேலைக்குச் சளைக்காது. நீங்க பார்க்கத்தானே போறீங்க. மூணு வேள சோறு, இரண்டு வேள காபி குடுத்து உங்க பிரியப்பட்ட சம்பளம் போட்டுக் குடுங்க." (‘மறக்க மனம் கூடலியே;, மே.கு.நூ., ப.122.) என்று பால்காரி, ஒரு பிள்ளையைப் பணியில் அமர்த்துகிறாள்.*

*அங்குசாமி - மாரியம்மாளுக்கு ஐந்து பிள்ளைகள்ளூ வறுமையால் குடும்பப் பாரத்தைக் கண்ணாத்தாள், டாக்டரின் வீட்டில் வேலைக்காரியாகச் சென்று சிறிது போக்குகிறாள் (‘வெட்டிவேர்;, திலகவதி கதைகள்-1, பக்.480-488). பாக்கியம் குடும்ப வறுமையின் காரணமாகத் தன் மூத்த மகளை ஒருவரின் வீட்டிற்கு வேலைக்காரியாக அமர்த்துகிறாள். அவள் சில வாரங்கள் கழித்துச் சுயநினைவின்றிக் கர்ப்பம் தரித்தவளாய் வீடு திரும்புகிறாள். சில நாட்களில் பெற்றெடுத்த குழந்தையோடு இறந்து போகிறாள். பாக்கியத்தின் மாமா இளைய பெண்ணை,*

*“செதம்பரத்துல ஒரு ஆபிசரு வீட்ல வேலைக்கு ஆளு கேக்கறாங்க. மாசம் எளுவத்தஞ்சு, எம்பது ரூபா தருவாங்க. நூறே தரச் சொல்லலாம். இருக்கப்பட்டவங்கதான்" (‘பாக்கியம்;, மே.கு.நூ., ப.153) என்று கூறி, வற்புறுத்த, பாக்கியம் வீட்டு வேலைக்காரியாகத் தன் இளைய மகளை அனுப்ப மறுக்கிறாள்ளூ பாக்கியமே பணி செய்யப் போகிறாள். வேலைக்காரியாகச் செல்லும் பெண்களின் சுமைளூ வேளை பளூ அதிகம் இருக்க, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தெளிவான வயதின்மையால் பெண்கள் இத்தொழிலில் சீரழிவதையும் திலகவதி எடுத்துக் காட்டுகிறார்.*

தொகுப்புரை

*பெண்ணின் ஆடை, அலங்காரங்கள், நடவடிக்கைகள், விருப்பங்கள் முதலியவற்றுக்குக் கட்டுப்பாடுகள் இருத்தல்ளூ பெண்ணின் தயக்கங்கள், கருத்துக்களைப் பொருட்படுத்தப்படாமைளூ குடும்பப் பாரம் பெண்ணைப் பாதித்தல்ளூ அவளது காதல் பல்வேறு காரணங்களால் தடை செய்யப்படுதல்ளூ புரிதல் இன்மை, குழந்தைத் தொழிலாளர்கள் ஆகியனவற்றை நோக்க, குடும்பம் என்பது ஜனநாயகப் பண்புகளை வளர்க்கும் தொட்டிலாக இல்லை என்னும் கருத்து உறுதிப்படுகிறது.*

*முதன்மை நூல்கள்:*


1. *திலகவதி - திலகவதி கதைகள் -1, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவ+ர் – 7, மு.ப.2002.*
2. *திலகவதி - திலகவதி கதைகள் -2, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவ+ர் – 7, மு.ப.2002.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********